# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

26th MARCH 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 20




## முலைமுடுக்குகளில் படுத்துறங்கிய எம்பிக்கள்...

04

## நண்பர்களை ஒன்றிணைத்த அமைச்சர்

06

## நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமா?

05

# ரணில்-மைத்ரி ரகசிய சந்திப்பு

## அரசில் இணையவும் விருப்பம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் மனக்கசப்பு இருந்தாலும்கூட அதையெல்லாம் மறந்து மைத்திரியை ரணிலின் அரசுடன் இணைப்பதற்கான நடவடிக்கை ஒன்று இடம்பெற்று வருவதை அறிய முடிகிறது.

அரசுடன் இணைந்திருக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சி எம்பிக்களே இந்த ஒப்பரேஷனில் இறங்கியுள்ளனர்.இவர்கள் சில நாட்களுக்கு முன்

02



## அலி சப்ரிக்கு காத்திருந்த அதிர்ச்சி

அண்மையில் இந்தியாவின் தலைநகர் புது டில்லியில் இடம்பெற்ற ஜீ-20 மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றிருந்தார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

அமைச்சர் ஒருவர் வெளிநாட்டுக்குச் செல்லும்போது அங்குள்ள இலங்கை தூதுவர் விமான நிலையம் சென்று அமைச்சரை வரவேற்பதுதான் சம்பிரதாயம்.

ஆனால்,இங்கு நடந்ததோ வேறு. அமைச்சரை வரவேற்கச் சென்றவரோ தூதரகத்தின் கனிஷ்ட அதிகாரி ஒருவர். இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொடவைக் காணவில்லை.

இது தொடர்பில் அமைச்சர் தேடிப் பார்த்தபோது அவர் இலங்கைக்குக்குச் சென்றுவிட்டார் என்று தகவல்



## அமைச்சுப் பதவி தராவிட்டால் எதிர்க்கட்சியில் அமர்வோம்

### ஜனாதிபதிக்கு மொட்டு சீனியர்கள் எச்சரிக்கை

மொட்டு கட்சியின் சீனியர்கள் பலருக்கு அமைச்சுப் பதவிகள் என்பது தொடர்ந்தும் எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது.

இதோ தருகிறேன்,அதோ தருகிறேன் என்று ஜனாதிபதி இழுத்தடித்துக்கொண்டே இருக்கிறார். இதனால் அவர்கள் ஜனாதிபதிமீது கடும் கடுப்பில் உள்ளார்கள்.

வரவு-செலவுத் திட்டத்தின்பின் வழங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.அது நடக்கவில்லை.இப்போது சர்வதேச நாணய நிதியின் நிதி கிடைப்பதற்கான அதன் அனுமதி கிடைத்த பின்

02






## மொட்டுவைப் பலப்படுத்துவதற்கு மஹிந்த களத்தில்...

### மே-ஜூன் அளவில் இலக்கை அடைவதற்குத் திட்டம்

பொருளாதார வீழ்ச்சி காரணமாக அடி மட்டத்தில் வீழ்ந்து கிடக்கும் மொட்டு கட்சியை தூக்கி நிமிர்த்துவதற்கு மஹிந்த ராஜபக்ஸ முழு வேகத்தில் இப்போது களமிறங்கியுள்ளார்.

மொனராகலையில் முதலாவது கூட்டத்தை நடத்தி கட்சியைப் பலப்படுத்தும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

கொழும்பு விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தை கட்சியைப் பலப்படுத்தும் ஒரு மத்திய நிலையமாக மாற்றியுள்ளார்.

அந்த வீடு பல கோடி ரூபா செலவில் அண்மையில்தான் புதுப்பிக்கப்பட்டது. அங்கு அமைக்கப்பட்ட மண்டபம்



02




புது சுடர்
www.puthusudar.lk
2023 MARCH 26 - SUNDAY

# திமிங்கிலங்களை விட்டுவிட்டு...

நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ எடுத்த பிழையான தீர்மானங்கள்தான் உடனடிக் காரணம்.

பிழையான தீர்மானம் என்று சொல்லும்போது அதற்குள் அதிகமாக அடங்குவது ஊழல்.மோசடிதான்.தனது அரசியலுக்கு உதவி செய்த வர்த்தக நண்பர்களுக்காக-அவர்கள் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக கோத்தா எடுத்த சில சிக்கலான-மோசடியான தீர்மானம்தான் பொருளாதார வீழ்ச்சிக்கே வித்திட்டது.

சீனி வரிக் குறைப்பு-இயற்கை பசளை இறக்குமதி போன்றவை இதற்கு சில உதாரணங்கள்.

50 ரூபாவாக இருந்த சீனிக்கான இறக்குமதி வரியை 25 சதமாகக் குறைத்தார்.அதன்மூலம் 1600 கோடி ரூபாவை அரசு இழந்தது.கோத்தாவின் நண்பர்கள் நன்மையடைந்தார்கள்.

இயற்கை பசளையை இறக்குமதி செய்து வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்பை இன்னொரு நண்பருக்கு வழங்குவதற்காக இரசாயன உரத்தைத் தடை செய்தார்.

இதனால் விளைச்சல் குறைந்து உணவுத் தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியது.பொருட்களின் விலைகள் அதிகரிக்கத் தொடங்கின.

பொருளாதார வீழ்ச்சிக்கான தொடக்கமே இதுதான். இதனைத் தொடர்ந்து எல்லாத் துறைகளும் வீழ்ச்சியடையத் தொடங்கின. இறுதியில் மக்கள் வீதிக்கு இறங்கி கோத்தாவை பதவியில் இருந்து விரட்டும் நிலை ஏற்பட்டது.

எல்லாவற்றுக்கும் காரணம் ஊழல், மோசடிதான். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக என்னதான் நல்ல திட்டங்களை வகுத்தாலும் அதற்குள் ஊழல்,மோசடி புகுந்துவிட்டால் அவ்வளவுதான்.

பொருளாதாரம் படுத்துவிடும்.

முதலில் அதன் வழியை அடைக்க வேண்டும்.அதன் பின்தான் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கையில் இறங்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் அதுவும் ஒன்று. அப்படியான ஓர் ஊழல் தடை நடவடிக்கை இன்மையால்தான் இலங்கையின் பொருளாதாரம் இப்படியான ஒரு கட்டத்தை அடைந்துள்ளது.

ஆனால், இதைக் கருத்தில்கொண்டோ – அல்லது சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்துவதற்கோ தெரியாது ஆசியாவிலேயே மிகவும் சிறந்த ஊழல்-மோசடி தடுப்புச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வரப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அப்படியான ஒரு சட்ட மூலத்தைக் கொண்டுவருவார் என்று நம்பலாம்.ஆனால்,அதை நடைமுறைப்படுத்துவார் என்று நம்பலாமா? அப்படி நடைமுறைப்படுத்தினால் அதிகம் பாதிப்பு அரசியல்வாதிகளுக்குத்தான். அதிலும் அவரது அரசில் இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு...

முழுக்க முழுக்க மொட்டுக் கட்சி எம்பிக்களின் ஆதரவில் ஜனாதிபதியான ரணில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா? அவர்கள் ஊழல் செய்வதைத் தடுப்பாரா?. ஒருபோதும் நடக்காது.

ரணிலை ஜனாதிபதியாக அவர்கள் தெரிவு செய்ததே ராஜபக்ஸ குடும்பத்தை-மொட்டு கட்சி அரசியல்வாதிகளை பாதுகாப்பதற்காகத்தான்.

ஜனாதிபதித் தெரிவுக்கான பிரசாரம் இடம்பெற்றபோது மொட்டு கட்சி உறுப்பினர்களை அழைத்து மஹிந்த ராஜபக்ஸ கூறிய முக்கிய விடயம் என்ன தெரியுமா?

“நாம் இந்தப் பிரச்சினையில் இருந்து எழ வேண்டும்.அதற்கு எமக்கு முதலில் தேவை பாதுகாப்பு.அந்தப் பாதுகாப்பை வழங்குவதற்கு டலஸ் அழகப்பெருமாவால் முடியாது.ரணிலால் மட்டுமே முடியும்.ஆகவே,நாம் ரணிலை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வோம்” என்று கூறினார்.

அதுவும் ரணிலையும் வைத்துக்கொண்டுதான் இதைக் கூறினார்.ஆக,ரணில் திட்டமிட்டே தெரிவு செய்யப்பட்டார்.

ராஜபக்ஸ குடும்பத்தின்-மொட்டுக் கட்சியின் ஊழலைப் பாதுகாப்பதற்காக.

அப்படி இருக்கும்போது ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தைக் கொண்டு வந்து எதைச் சாதிக்கப் போகிறார் ரணில்?

ஊழல்வாதிகளைத் தண்டிக்கும் வாய்ப்பு ரணிலுக்கு நல்லாட்சியில் கிடைத்ததது.ஒரு திருடனையாவது பிடித்தாரா? ஒரு திருடனையாவது தண்டித்தாரா?.குஊஜனு,அது,இது என்று வெறுமனே காலத்தைக் கடத்தினார். திருடர்களைப் பிடிப்பதுபோல் படம் காட்டினார்.

அவர்து ஆட்சியில் இடம்பெற்ற மத்திய வங்கி மோசடிக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தார்? எதுவும் இல்லை. மத்திய வங்கி ஆளுநர் மகேந்திரனை முழுக்க முழுக்க பாதுகாத்தார்.ராஜபக்ஸ குடும்பத்தைப் பாதுகாத்தார்.

அந்த பாதுகாப்பு காரணமாகத்தான் இப்போது ராஜபக்ஸ தரப்பு ரணிலை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துகொண்டது.

அப்படி இருக்கும்போது புதிய சட்டத்தைக் கொண்டு வந்து ரணில் யாரைப் பிடிக்கப் போகிறார்..? யாரைத் தடுக்கப் போகிறார்...?

திமிங்கிலங்களை விட்டுவிட்டு சிறிய மீன்களை பிடிக்கும் வேலைதான் இது.இப்படிச் செய்து எப்படி ஊழலை முற்றாக ஒழிப்பது?

## அமைச்சுப்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

தருவார் என்று எதிர்பார்த்தார்கள்.அதுவும் நடக்காதுபோலவே தெரிகிறது.

இதனால் ஜனாதிபதிக்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர்.

ஓரிரு நாட்களுக்கு முன் மொட்டு உறுப்பினர்களுக்கும் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அச்சந்திப்பில் இந்த விடயம் பேசப்பட்டது.

ஜனாதிபதி அமைச்சுப் பதவி தரவில்லையென்றால் நாம் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்பட வேண்டும் இல்லாவிட்டால் எதிர்க்கட்சியில் அமர வேண்டும் என்று அவர்கள் பசிலிடம் கூறினர்.

ஓரிரு நாட்கள் பொறுத்திருந்து பாப்போம். இல்லாவிட்டால் இதையே செய்வோம் என்று அவர்கள் கூறினர்.

அதிலும் ஜோன்சன் பெர்னாண்டோ – ரோஹித அபயகுணவர்தனவுக்கு அமைச்சுப் பதவி கட்டாயம் வழங்கப்பட வேண்டும் அவர்கள் அங்கு தெரிவித்தனர்.

## மொட்டுவை...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

சந்திப்புக்களை நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இருந்த மொட்டு இப்போது 95 எம்பிக்களை மாத்திரம் கொண்டுள்ளது. அவர்களுள் பலர் ஜனாதிபதியுடன் ஒட்டி நிற்கிறார்கள்.

இவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து-பிரிந்து சென்ற கட்சியின் ஆதரவாளர்கள்-வாக்காளர்கள் அனைவரையும் மீண்டும் இணைத்து கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் இப்போது மஹிந்த இறங்கியுள்ளார்.

மே-ஜுன் மாதமளவில் கட்சியைப் பலப்படுத்திவிட வேண்டும் என்ற இலக்கை கையில் எடுத்துக்கொண்டு மஹிந்த களமிறங்கியுள்ளார் என்று அவரது வட்டாரம் தெரிவிக்கிறது.

## அலிசப்ரிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

கிடைத்தது.

இதனால் கடும் அசௌகரீகங்களுக்கு உள்ளானார் அமைச்சர் அலி சப்ரி.

இதைக் கேள்விப்பட்ட இராஜதந்திரிகள் அலி சப்ரியைத் தொடர்புகொண்டு வினவியுள்ளனர்.சம்பவம் உண்மைதான். ஆனால்,என்ன செய்வது என்று கூறினார் எல்லோருக்கும்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்யுமாறு அவர்கள் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

## ரணில்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மைத்திரியை சந்தித்து இந்த விவகாரம்பற்றி விரிவாகப் பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் விளைவாக ரணிலும் மைத்திரியும் நாடாளுமன்றில் சந்தித்துப் பேசியுள்ளனர்.இதற்கான ஏற்பாட்டை அந்த எம்பிக்களே செய்தனர் என்று அறியக் கிடைத்துள்ளது.

அந்தச் சந்திப்பின்போது அரசில் இணைவதற்கான தனது விருப்பத்தை மைத்திரி தெரிவித்தார் என்று மைத்திரியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதனைத் தொடர்ந்துதான் இப்போதெல்லாம் மைத்திரி மீண்டும் சர்வகட்சி அரசுப்பற்றி பேசத் தொடங்கியுள்ளார்.

ரணிலின் அரசுடன் இணைவதற்கு சு.கவின் பொதுச் செயலாளர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறார்.அரசுடன் இணைத்துள்ள சு.க உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும் முடிவை எடுத்ததும் அவர்தான்.

அவர் இப்போது வெளிநாடு ஒன்றில் நிற்கிறார்.

அந்தச் சந்தர்ப்பதைப் பயன்படுத்தித்தான் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

விரைவில் மைத்திரி அரசுடன் இணையும் செய்தி வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## சாய்ந்தமருதில் முஅத்தீன் மற்றும் கத்திப்மார்களுக்கு உலர் உணவு பொதி வழங்கிவைப்பு!

(யூ.கே. காலித்தீன்)

புனித ரமழான் மாதத்தினை முன்னிட்டு கடந்த காலங்களைப் போன்று, இம்முறையும் கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற ஆடை உலகின் சமுத்திரம் முபாறக் டெக்ஸ்டய்ல்ஸ் உரிமையாளரினால் சாய்ந்தமருது மாளிகைக்காடு பிரதேச பள்ளிவாசல்களில் கடமை புரியும் முஅத்தீன் மற்றும் கத்திப்மார்களுக்கு உலர் உணவு பொதியும் பண அன்பளிப்பும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



முபாறக் டெக்ஸ்டய்ல்ஸ் உரிமையாளர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். முபாறக் அவர்களது தலைமையில் (23) ஆம் திகதி இடம்பெற்ற இந்நிகழ்வில் முபாறக் டெக்ஸ்டய்ல்ஸ் ின் நிருவனரும் அவரது தந்தையுமான அல்ஹாஜ் எம். மீரசாஹிப், முஅத்தீன் கத்திப் சம்மேளனத்தின் தலைவரும் சாய்ந்தமருது முகையதீன் பள்ளிவாசளின் பேஸ் இமாமுமான அஷ்ஷேய்க் எம்.ஐ.எம். ஆதம்பாவா (ரஷாதி) உட்பட சம்மேளனத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிராமத்துக்குச் செல்லும் நாடாளுமன்றம்

எம்பிக்கள் தொடர்பில் மக்களுக்கு அதிருப்தி உள்ளதால் நாடாளுமன்றத்தை கிராமங்களுக்கு எடுத்துச் செல்லும் வேலைத்திட்டம் ஒன்றைத் தொடங்கவுள்ளார் ஜனாதிபதி.

மக்களின் காலடிக்குச் சென்று எம்பிக்கள் செய்து வருகின்ற வேலைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதும் அவர்களின் யோசனைகளை உள்வாங்கி செயற்படுவதுமே இதன் நோக்கம்.

இதற்கான வேலைத்திட்டத்தை வரையும் பொறுப்பை ஜனாதிபதி அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் ஒப்படைத்துள்ளார்.

வருகின்ற ஏப்ரல் புது வருடத்தில் எம்பிக்களையும் கல்விமான்களையும் ஒன்றிணைத்து களமிறக்குவதற்காக வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்துக்கொண்டு வருகிறார் பிரசன்ன.



# 120 அரச நிறுவனங்கள் தனியார் மயம்

அரச நிறுவங்களுள் 120 நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிறுவனங்கள் அனைத்தையும் பட்டியல்படுத்திக்கொண்டு கட்டங்கட்டமாக அவை தனியார்மயப்படுத்தப்படும் என்று அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

நட்டமடையும் நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்து அவற்றை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதே இதன் நோக்கம் என்று நிதி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.




# ஊழல் எம்பிக்களுக்கு தண்டனை இல்லை:

## அமெரிக்கா குற்றச்சாட்டு

ஊழல் ,மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள எம்பிக்களுக்கு எதிராக இலங்கை அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் இதுவரை விசாரணைகளை நடத்தவில்லை என்றும் அமேரிக்கா தெரிவித்துள்ளது.

குறிப்பாக, மூன்று எம்பிக்கள் அவ்வாறு தண்டிக்கப்படாமல் உள்ளனர் என்று மேலும் தெரிவிக்கிறது.

அவர்களில் ஒருவர் திறைசேரியுடன் தொடர்புபட்டவர் என்று அமேரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# டெலிகொம் நிறுவனத்தை வாங்க முதலீட்டார்கள் வரிசையில்

அதிக இலாபமீட்டும் டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை வாங்குவதற்கு சர்வதேச முதலீட்டாளர்கள் பலர் விண்ணப்பித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதில் 49 வீத பங்குகளை ஏற்கனவே மலேசியாவை சேர்ந்த மேக்சிஸ் நிறுவனம் வைத்துள்ளது.மிகுதி அரசிடம். மிகுதி பங்குகளே விற்கப்படவுள்ளன.

இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவனம்,முகேஷ் அம்பானியின் தலை நிறுவனம்,சுபாஷ்கரனின் லைக்கா மொபைல் நிறுவனம் போன்றவை மிகுதி பங்குகளை வாங்குவதற்கு முயற்சி செய்கின்றன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.



# 85 கோடி ரூபா செலவில் காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகை...

## பூரணப்படுத்துவதற்கு இன்னும் 10 கோடி ரூபா தேவை

காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அதி நவீன ஜனாதிபதி மாளிகைக்கு 85 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைப் பூரணப்படுத்துவதற்கு இன்னும் 10 கோடி ரூபா தேவையாம்.

இந்த மாளிகையில் அதிக தடிமண்கொண்ட கண்ணாடிகள் பயன்படுத்தி நிலக்கீழ் மீன் தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன.மேலும் பல நவீன வசதிகள் இந்த மாளிகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது 2020 இல்தான் இந்த மாளிகையின் நிர்மாணப்பணிகள் தொடங்கப்பட்டன.அதிகமான வேலைகள் முடிந்துவிட்டன.

ஜனாதிபதி ஒருவர் எப்போதோ ஒருநாள் தங்குவதற்காக மக்களின் கோடி கணக்கான பணத்தை விரயம் செய்து இப்படியொரு மாளிகையை அமைக்க வேண்டுமா என்ற கேள்விகள் அரசியல் அரங்கில் முன்வைக்கப்படுகின்றன.

எமது ஆட்சியில் இவ்வாறான மாளிகைகளையெல்லாம் வெளிநாட்டு சுற்றுலாவாசிகளுக்கு வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிப்போம் என்று ஜேவிபி தெரிவித்துள்ளது.

# பழைய மாணவிகள் நடைபவணி





(அஷ்ரப் ஏ சமத்)

வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தின் 90வது ஆண்டு முன்னிட்டு பழைய மாணவிகள் ஏற்பாட்டில் நடைபவணி ஒன்று 25 சனிக்கிழமை கல்லூரியிலிருந்து ஹென்றி பேதிரிஸ் விளையாடடு மைதானம் வரை வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வு கல்லூரியின் அதிபர் திருமதி அருந்ததி இராவிஜயன் தலைமையிலும் கல்லூரியின் முகாமையாளர் மலா சபாரட்டனம், அத்துடன் கொழும்பு மவாட்ட பாராளுமன்ற உறுப்பிணர் மனோ கனேசனும் கலந்து கொண்டனர்

இந் நிகழ்வில் பழைய மாணவிகள், ஆசிரியைகள், பெற்றோர்கள்,நலன் விரும்பிகள் மற்றும் பேண்ட் பாத்தியக்குழு, நாட்டியம் ,பரதநாட்டியம், பலவர்ண வாகனச் சவாரிகள் பைசிக்கல் சவாரிகள் பாடசாலையின் உள்ள பல்வேறு குழுக்கள் , விளையாட்டுக்குழுக்களும் இணைந்து இந் நிகழ்வினை வெற்றிகரமாக சிறப்பித்தனர்.

உண்மை, உண்ணதம், தெளிவு......
இலங்கையின் தனித்துவமான ”உண்மைக்கே முதலிடம்”
www.puthusudar.lk

## அலரிமாளிகைக்குள் அன்றிரவு...

### தொடர் 05...

ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்



# மூலைமுடுக்குகளில் படுத்துறங்கிய எம்பிக்கள்...

## காட்டு வழியால் தப்பியோடிய சமல்...
## பாதுகாப்பாக வெளியேறிய மஹிந்த...
## எல்லோரும் இராணுவ முகாமுக்குள் ஓடுங்கள்...

மஹிந்தவை சற்று நேரம் உறங்கச் சொல்கிறார்கள் எம்பிக்கள்.
நள்ளிரவைக் கடந்துவிட்டது...
தூக்கம் எல்லோருக்கும்.அவரவர் கிடைத்த கிடைத்த இடங்களில்...
சாப்பாட்டு மேசைகளில்...கதிரைகளில்...
நாமல் ராஜபக்ஸவும் ஒரு மேசையின் மேல்...
ஏனைய எம்பிக்கள் மேசைகளின் மேல்..கதிரைகளில்...
மூலைமுடுக்குகளில்..
பவித்ராவும் அவரது கணவரும் மட்டும்தான் சொகுசு தூக்கம்.
அவர்கள் இருவரும் நல்ல சொகுசான சோபாக்கள்மீது.
ஏனையவர்கள் கண்ட கண்ட இடங்களில்..
அப்போது வெளியில் ஆர்ப்பாட்டம் சற்றுத் தணிவு.
இல்லாவிட்டால் எப்படித் தூங்குவது.
மஹிந்தவும் சிறிது நேரம் தூக்கம்.

**காட்டு வழியால் தப்பியோடிய சமல்**

சமல் ராஜபக்ஸ எங்கே...? அவரது நிலை என்ன? தேடுகிறார் மஹிந்த...

தேடிப் பாருங்கள். உத்தரவிடுகிறார் மஹிந்த அதிகாரிகளுக்கு...

சமல் மெதமுலனவில். அவரது வீட்டில்...

வீரகெட்டிய கால்டன் அருகில் சுமார் 300 பேர்.

அங்கிருந்து கால்நடையாக வீரகெட்டிய சந்திக்கு.அங்கிருந்து மெதமுலனவிற்கு...

அவ்வாறு செல்லும்போது அதிகரிக்கிறது எண்ணிக்கை.

ஆம்...மேலும் இணைந்துகொள்கிறார்கள் மக்கள்.

அப்போது..சமல் மெதமுலன வீட்டில்...

அந்த வீட்டை நோக்கித்தான் இந்த மக்கள்.

தகவல் கிடைக்கிறது சமலுக்கு...

உடனே பாய்கிறார் அங்கிருந்து...காட்டு வழியாக...

வேறு ஒரு வீட்டில் தஞ்சம்...அவரது ஒன்றுவிட்ட சகோதரர் வீட்டில்.லக்ஷ்மன் ராஜபக்ஸவின் வீட்டில்...

உயிர் தப்புகிறார் சமல்...

அடுத்து பசில்...!!!

தேடுகிறார்கள் அவரையும்.

அவர் ஒரு பாதுகாப்பான இடத்தில். தொடர்புகொள்கிறார் மஹிந்தவை அடிக்கடி...

**மூலைமுடுக்குகளில் படுத்துறங்கிய எம்பிக்கள்**

மஹிந்தவை சற்று நேரம் உறங்கச் சொல்கிறார்கள் எம்பிக்கள்.

நள்ளிரவைக் கடந்துவிட்டது...

தூக்கம் எல்லோருக்கும்.அவரவர் கிடைத்த கிடைத்த இடங்களில்...

சாப்பாட்டு மேசைகளில்...கதிரைகளில்...

நாமல் ராஜபக்ஸவும் ஒரு மேசையின் மேல்...

ஏனைய எம்பிக்கள் மேசைகளின் மேல்.. கதிரைகளில்...மூலைமுடுக்குகளில்..

பவித்ராவும் அவரது கணவரும் மட்டும்தான் சொகுசு தூக்கம்.

அவர்கள் இருவரும் நல்ல சொகுசான சோபாக்கள்மீது.

ஏனையவர்கள் கண்ட கண்ட இடங்களில்..

அப்போது வெளியில் ஆர்ப்பாட்டம் சற்றுத் தணிவு.

இல்லாவிட்டால் எப்படித் தூங்குவது.

மஹிந்தவும் சிறிது நேரம் தூக்கம்.

**பாதுகாப்பாக வெளியேறிய மஹிந்த ...!!!**

இருந்தும், நான்கு மணிக்கே எழும்புகிறார் மஹிந்த. மாளிகையை விட்டு வெளியேறுவதற்காக...

முகத்தில் கடும் கவலை.

கடும் பாதுகாப்பு. காரில் மஹிந்த.சுற்றி இராணுவம். அப்படியே வெளியே கூட்டிச் செல்கிறார்கள் மஹிந்தவை...

நாமலையும் ரோஹிதவையும் அழைக்கிறார் மஹிந்த.

இல்லை... இருக்கின்ற கூட்டத்தை பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பிவிட்டு வருகிறோம் என்கிறார்கள்.

கொழும்பில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் திருமலை கடற்படை முகாமுக்கு...

பின்னர் ரோஹிதவும் பாதுகாப்போடு வெளியேற்றம்.

அதன்பின் நாமலும் வெளியேற்றம். அவரது மனைவியுடன்...

பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்துக்கு கொண்டு செல்லப்பட்டு ஹெலிகொப்டரில் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

**எல்லோரும் இராணுவ முகாமுக்குள் ஓடுங்கள்:**

மஹிந்த வெளியேறிவிட்டார்...

ஏனையவர்களின் பாதுகாப்பு....?

அறிவுரை வழங்குகிறார் பசில்.

எம்பிக்கள் மக்களை அழைத்துக்கொண்டு அருகில் இருக்கும் இராணுவ முகாம் ஒன்றுக்குச் செல்லுங்கள் என்று...

மெல்ல மெல்ல தளர்கிறது பாதுகாப்பு அங்கே.மஹிந்த சென்றதும்.

அங்கிருந்து எப்படி வெளியே செல்வது...?

வழியை காட்டுகிறார்கள் இராணுவ அதிகாரிகள்.பாதுகாப்பான வழியை... வழங்குகிறார்கள் உரிய ஆலோசனை...

வெளியேறுகிறார்கள் அதன்படியே...

அத்தோடு முடிகிறது அலரிமாளிகை காட்சி.

அடுத்த காட்சிகள் அந்த மாளிகைக்கு வெளியே இனி..

**நான்கு எம்பிக்கள் மட்டுமே மரண வீட்டுக்கு...**

இந்த நிலையில்தான்...அந்தக் கலவரத்தில்...கொல்லப்படுகிறார் பொலன்னறுவை மாவட்ட எம்பி அமரகீர்த்தி அத்துகோரல.

பரிதாபம்...

அவரது இறுதிச் சடங்கில்கூட கலந்துகொள்ள முடியவில்லை சக எம்பிக்களால்...

எல்லோரும் தலைமறைவு.

ஒருவாறு கஷ்டப்பட்டு...பதுங்கி பதுங்கி ... வெறும் நான்கு எம்பிக்கள் மாத்திரமே கலந்துகொள்கிறார்கள்...

சாமர சம்பத் தசாநாயக–வசந்த யாப்பா–சுதத் மஞ்சுள–ஜயரத்ன ஹேரத் மஞ்சுள ஆகிய நால்வரே அந்த எம்பிக்கள்.

தனியே செல்கிறார் சாமர சம்பத்.அனுதாப உரை ஒன்றை நிகழ்த்த முற்படுகிறார். வீட்டார் தடுக்கிறார்கள்.

காரணம்...?

அரசியல்வாதிகளுக்கு அனுமதி இல்லை.

வசந்த யாப்பா–மஞ்சுள ஆகிய இருவரும் இறுதிக் கிரியைகள் முடிந்த பின்பே அங்கு செல்கிறார்கள்.

நாங்கள் வருவதற்கு ஜனாதிபதி செயலகத்தில் வாகனம் கேட்டோம். தாமதமாகத்தான் கிடைத்தது என்கிறார்கள்.

மரண வீட்டுக்கு பொலன்னறுவை எம்பிக்கள்கூட செல்லவில்லை.

**மஹிந்தவுக்குப் பாதுகாப்பு இல்லம்: காடு-மேடெல்லாம் தேடல்**

இப்போது மஹிந்தவின் நிலை...? கடும் மனஉளைச்சல்.பதவி விலகளால் ஓய்வெடுக்கிறார்

திருமலை கடற்படை முகாமில்...

பல நாட்களாக அங்கு..

தொடர்ந்தும் அங்கு இருக்க முடியாது. கொழும்புக்குத் திரும்ப வேண்டும்.ஆனால், பாதுகாப்புப் பிரச்சினை.

பழைய வீட்டில் தங்க முடியாது.வேறொரு வீடு பார்க்க வேண்டும்.

பாதுகாப்பான வீடு...ரகசியமான வீடு.

தேடுகிறார்கள்.கொழும்பில் பல இடங்களில்...

காடு–மேடெல்லாம் ஏறி...

இறுதியில்...சிக்குகிறது ஒரு வீடு.

அது முன்னாள் அமைச்சர் ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லம்.

அந்த வீட்டைக் கைப்பற்றுகிறார் மஹிந்த.

**மஹிந்த பயணித்த ஹெலிகொப்டருக்கான கட்டணம் 8லட்சம் ரூபா**

நாடாளு மன்றம் கூடுகிறது.கலந்து கொள்ள வேண்டும்.

வெளியேறு கிறார் அங்கிருந்து.18 ஆம் திகதி.

விமானப் படையின் ஹெலிகொப்டர் மூலம் வந்திறங்குகிறார் ரத்மலானை விமான நிலையத்தில்.அங்கிருந்து நாடாளுமன்றுக்கு...

அதற்கான விமானச் செலவு மட்டும் 8 லட்சம் ரூபா...

நண்பர்கள் சிலரிடம் கூறுகிறார் அந்தக் கட்டணத்தைச் செலுத்துமாறு...

இப்போது கொழும்பில். அந்தப் பாதுகாப்பான இல்லத்தில்...

இதுதான் நடந்தது அலறி மாளிகைக்குள்...

- முற்றும் -



# நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமா?

இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு IMF அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில்...?

IMF தரப்போகும் 3 பில்லியன் டொலர் என்பது சிறிய தொகை. இதை வைத்து எப்படி பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பது?

ரணில் இல்லாமல் சஜித், அனுர, பொன்சேகா ஆகிய மூவரில் ஒருவர் ஜனாதிபதியாகி இருந்திருந்தால் இந்த நிதி கிடைத்திருக்குமா?

கிடைக்கும் நிதியை வைத்து என்ன செய்வதற்குத் திட்டமிட்டுள்ளீர்கள் ?

மக்களுக்கான நிவாரணத்தை வெட்டிவிடுமாறு IMF கூறியதா?

**IMF நிதி கிடைத்தவுடன் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று ஜனாதிபதி எங்குமே சொல்லவில்லை. அவர்கள்,இவர்கள் எதுவும் சொல்லலாம். அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று. யார் சொன்னாலும் ஜனாதிபதி சொன்னால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும்.. அவரிடம்தான் அதிகாரம் உண்டு.ஆகவே,அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமா, இல்லையா என்று அவர்தான் சொல்ல வேண்டும்.**

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஐஆகு அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில்...?**

பதில் : இது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.இப்போதுள்ள பொருளாதார பிரச்சினையை ஓரளவாவது தீர்ப்பதற்கு ஐஆகு நிதி உதவி பெரிதும் உதவும் என்று நாம் நம்புகிறோம்.

இந்த அனுமதி கிடைத்தது இலகுவான விடயம் அல்ல.மிகவும் சிரமப்பட்டே இந்த அனுமதியைப் பெற்றோம்.இதற்கான கௌரவம் ஜனாதிபதி ரணிலுக்கே உரியது.

**கேள்வி : 11 மாதங்களுக்கு முன் அதாவது,கோத்தா ஜனாதிபதியாக இருக்கும்போதே இந்த நிதியைப் பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டம் தொடங்கப்பட்டது.அவர் இப்போது ஜனாதிபதியாக இருந்திருந்தால் இன் நிதியைப் பெற முடியாமல் போயிருக்குமா?**

பதில் : ஆம்..அவர்தான் மார்ச் மாதமளவில் ஐஆகு நிதியைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியைத் தொடக்கி வைத்தார்.ஏப்ரல் மாதமளவில் அப்போதைய நிதி அமைச்சர் அலி சப்ரி அமேரிக்கா சென்று ஐஆகு கூட்டத்தில் கலந்துகொண்டார்.

ரணில் பிரதமரானது முதல் ஐஆகு நிதியைப் பெறுவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டார்.அதன் விளைவாக இப்போது அனுமதி கிடைத்துள்ளது.இந்த வாரத்துக்குள் நிதி கிடைத்துவிடும்.எட்டுத் தவணைகளில் பணம் கிடைக்கும்.

330 மில்லியன் டொலர் முதலாவது தவணையில் கிடைக்கும்.முதலாவது தவணை கிடைத்ததும் அடுத்த தவணையும் கிடைக்கும் என்று சொல்ல முடியாது.

6 மாதங்களுக்கு ஒரு தடவை ஆய்வு செய்தே நிதியை வழங்கும்.

**கேள்வி : IMF தரப்போகும் 3 பில்லியன் டொலர் என்பது சிறிய தொகை.இதை வைத்து எப்படி பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பது?**

பதில் : IMF இன் அங்கீகாரம் என்பது சர்வதேச நாடுகள் எமக்கு கடன் வழங்குவதற்கான ஓர் அங்கீகாரம்தான்.எமக்கு கடன் வழங்குகின்ற நிதி நிறுவனங்கள் இனி கடன் வழங்கும்.

IMF அனுமதியின் மூலம் 7 பில்லியன் டொலர்வரை கடன் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பெறுவதற்கு 2 அணிகள் செயற்பட்டன.ஓர் அணி முன்னணியில் இருந்தும் இன்னோர் அணி திரைக்கு பின்னால் இருந்தும் செயற்பட்டன.

முன்னணியில் இருந்து செயற்பட அணி இலங்கையில் இருந்து செயற்பட்டது.பின்னணியில் இருந்து செயற்பட்ட அணி வொசிங்டனில் இருந்து செயற்பட்டது. அதேபோல்,வேறு நாடுகளில் இருந்தும் செயற்பட்டது.

எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கான ஒத்துழைப்பை வழங்கினர்.மக்கள் மிகவும் பொறுமையாக இருந்து இதற்கு உதவி வழங்கினர்.அனைவர்க்கும் நன்றி.

**கேள்வி : ரணில் இல்லாமல் சஜித்,அனுர,பொன்சேகா ஆகிய மூவரில் ஒருவர் ஜனாதிபதியாகி இருந்திருந்தால் இந்த நிதி கிடைத்திருக்குமா?**

பதில் : நிச்சயமாக கிடைத்திருக்காது.பொன்சேகாபற்றி எனக்குத் தெரியாது.அவர் ஐஆகு பற்றி எந்தவொரு கருத்தும் சொல்லவில்லை.

சஜித் தெளிவாகக் கூறி இருந்தார் அவரது ஆட்சியில் ஐஆகு நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து விலகுவார்கள் என்று.

ஐஆகு இடம் சென்ற எந்த நாடும் முன்னேறியது இல்லை என்ற கருத்தை ஜேவிபி கூறி இருந்தது.

ஆனால்,ரணில் ஜனாதிபதியானது முதல் ஐஆகு நிதியைப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.அவரால்தான் இது சாத்தியமானது.

மறுபுறம்,சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.எமது நாட்டு வெளிநாட்டுத் தொழிலாளர்கள் பணம் அனுப்புவதும் அதிகரித்துள்ளது.

**கேள்வி : கிடைக்கும் நிதியை வைத்து என்ன செய்வதற்குத் திட்டமிட்டுள்ளீர்கள் ?**

பதில் :நாம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து வெளியே செல்லமாட்டோம்.நல்ல பல திட்டங்களை மேற்கொள்வோம்.

**கேள்வி : இதனைத் தொடர்ந்து அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமா?**

பதில் : ஜனாதிபதி அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று சொல்லவில்லை.அவர்கள்,இவர்கள் சொல்லலாம் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று.யார் சொன்னாலும் ஜனாதிபதி சொன்னால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும்..அவரிடம்தான் அதிகாரம் உண்டு.

ஆகவே,அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமா ,இல்லையா என்று அவர்தான் சொல்ல வேண்டும்.

**கேள்வி : மக்களுக்கான நிவாரணத்தை வெட்டிவிடுமாறு ஐஆகு கூறியதா?**

பதில் : ஐஆகு ,உலக வங்கி,என எந்தவொரு நிதி நிறுவனமும் மக்களுக்கான நிவாரணங்களை வெட்டிவிடுமாறு கூறவில்லை.

ஆனால்,உரியவர்களுக்கு மட்டும் நிவாரணம் கிடைக்க வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. அது பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் விடயம்.

**கேள்வி : நாணயத்தின் பெறுமதி கூடிவிட்டது என்ற நாடகம் முடிந்துவிட்டதா?**

பதில் : இல்லை.அது நாடகமில்லை.இப்போது எடுக்கப்பட்ட நடவடிக்கையால் சில முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.இதைக் குறைத்து மதிப்பிட வேண்டாம்.

மறைந்திருந்த 500 மில்லியன் டொலர் வெளியே வந்துள்ளது.இது நாட்டுக்கு நன்மையான விடயம் இல்லையா?

**கேள்வி : நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமா?**

பதில் : அப்படியொரு தீர்மானத்தை நாம் எடுக்கவில்லை.அரசு முன்னுரிமை கொடுப்பது பொருளாதாரத்தை முன்னேற்று வதற்குத்தான்.இதை நாம் வேகமாகச் செய்து முடிப்போம்.

**கேள்வி : நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்று சிசிர ஜயக்கொடி கூறியுள்ளாரே.?**

பதில் : அதை அவரிடம்தான் கேட்க வேண்டும்.அரசைப் பொறுத்தவரை அப்படியொரு தீர்மானத்தை எடுக்கவில்லை.

**கேள்வி : அப்போ உள்ளூராட்சி சபைத் தேர்தல் ?**

பதில் : அதைத் தேர்தல் ஆணைக்குழுதான் தீர்மானிக்க வேண்டும் – என்றார்.

***

# கஞ்சா அடிக்கும் ஜேவிபி

சிகரெட்-கஞ்சா-சாராயம்-காதல் எல்லாம் அன்று ஜேவிபியிடம் இருக்கவில்லை.அதிக அறிவு இருந்தது.

ரோஹன விஜேவீர கட்சியை ஆரம்பித்தபோது இருந்த நிலை அது.

ஆனால்,இன்று ஜேவிபியின் நிலை மாறிவிட்டது.
பல்கலைக்கழகத்தில் போட்டி போட்டுக்கொண்டு கஞ்சா அடிக்கிறார்களாம்.

இதைச் சொன்னவர் எஸ்.பி. திஸாநாயக்க...



# அமைச்சருக்கே இப்படியென்றால்...



அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதற்கு எதிர்ப்புகள் இருக்கின்றபோதிலும்,சில நேரங்களில் தனியார்மயப்படுத்தினால் என்னவென்று மனதில் தோன்றுவதும் உண்டு.

அதற்குக் காரணம் அந்த நிறுவனங்களில் ஒரு வேலையை முடிப்பதற்கு மக்கள் படும் அவதிதான்.

பலருக்கு அப்படியான அனுபவங்கள் உண்டு. அமைச்சர் ஒருவருக்கும் உண்டு.அவர்தான் ஹரீன் பெர்னாண்டோ.

மின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக அவர் அவரது பதுளை வீட்டு கூரையில் ளுழுடயுசு "டுயுவுநுகளைப் பூட்டி இருக்கிறார். அவ்வாறு பூட்டி 2 வருடங்கள் ஆகின்றனவாம்

அதற்கு இன்னும் ஊழுுநேுஊவுழுசு கொடுக்கவில்லையாம். அமைச்சருக்கே இப்படியென்றால்...சாதாரண மக்களுக்கு...????




# நடிகைக்கு உதவிய சஜித்...!!!

சுசந்தா சந்திரமாலி என்ற சிங்கள நடிகை சுகயீனமுற்றுள்ளார். அவருக்குத் தேவையான மருந்துப் பொருட்களை பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமாக இருந்தது.நாட்டில் நிலவும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடே இதற்கு காரணம்.

இன்னொரு நடிகர் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவைத் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினார்.

உடனே தனக்குத் தெரிந்த வைத்தியர்களின் ஊடாக மருந்துப் பொருட்களைத் தேடத் தொடங்கினார் சஜித்.

இறுதியில் வெற்றி.பெரும் சிரமப்பட்டு...

அந்தப் பொருட்களை எடுத்துக்கொண்டு சஜித் நேராக அந்த நடிகையின் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

அவை 63 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள்.

நடிகைக்கோ கடும் மகிழ்ச்சி.

நன்றிகளைத் தெரிவித்தார் சஜித்துக்கு...

நீங்கள் நலம் பெற்று தொடர்ந்து கலைச் சேவை செய்ய வேண்டும் என்று வாழ்த்திவிட்டுச் சென்றார் சஜித்.





# மைத்திரியைத் திட்டித் தீர்த்த தயாசிறி

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கும் அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெறத் தொடங்கியுள்ளது.

அதற்குக் காரணம் தயாசிரியின் இடத்துக்கு வேறு ஒருவரை பதில் செயலாளராக நியமித்தமைதான்.

தயாசிறி தற்போது வெளிநாட்டில் நிற்பதால் சரத் எக்கநாயக்கவை கட்சியின் பதில் பொதுச் செயலாளராக நியமித்துள்ளார் மைத்திரி.

செயலாளர் ஒருவர் வெளிநாட்டில் இருக்கும்போது பொதுவாக எந்தக் கட்சியும் செய்யாத வேலை இது.

இதனால் ஆத்திரமடைந்த தயாசிறி மைத்திரிக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து கடுமையாகத் திட்டித் தீர்த்துள்ளார்.

"நாட்டுக்கு வந்து பாத்துக்கிறேன்.." என்று கூறி போனை வைத்தாராம்.

நாட்டுக்கு வந்து என்ன கூத்துக் காட்டப்போகிறாரோ ?

# பழைய நண்பர்களை ஒன்றிணைத்த அமைச்சர்





கிரிக்கட்டை துறையை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளார் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க.

அதற்காக அவர் முதலில் செய்தது நீண்ட காலமாக மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருந்த இரு பழைய நண்பர்களை ஒற்றுமைப்படுத்தி ஒரே மேசைக்கு அழைத்து வந்தமைதான்.

அவர்கள்தான் முன்னாள் கிரிக்கட் கவுன்சிலின் தலைவர் திலங்க சுமதிபால மற்றும் முன்னாள் அமைச்சர் அர்ஜ/ன ரணதுங்க.

இவர்கள் இருவரும் கிரிக்கட் கவுன்ஸிலின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் முட்டி மோதத் தொடங்கினர்.இதனால் அவர்களிடையே மனவிரிசல் ஏற்பட்டது.

அந்த விரிசலைப் போக்கி இருவரையும் ஒற்றுமைப்படுத்தியுள்ளார் ரொஷான் ரணசிங்க.

அவர்கள் இருவரையும் ஒரே மேசைக்கு அழைத்து கிரிக்கட் துறையை முன்னேற்றுவதற்கான ஆலோசனையைப் பெற்றுக்கொண்டார் அமைச்சர்.

# மஹிந்தவின் மருமகனுக்கு கடும் பாதுகாப்பு

ஹக்மன பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஹக்மன பிரதேச சபையில் இடம்பெற்றது.அப்போது அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய எம்பியும் மஹிந்த ராஜபக்ஸவின் மருமகனுமாகிய நிபுண ரணவக்கவுக்கு கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.



அப்பிரதேச மக்கள் அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தயாராகிறார்கள் என்று தகவல் கிடைத்தமையே இதற்குக் காரணம்.

கூட்டத்துக்கு ஒரு மணி நேரம் தாமதமாக வந்தார்.சிறிது நேரம் கூட்டத்தை நடத்திவிட்டு எந்தவித பிரயோசமான முடிவும் எடுக்காமல் கூட்டத்தை முடித்துவிட்டுச் சென்றுவிட்டார்.

அவ்வளவு பயம்.

# ரணில் விரும்பிக் கேட்ட பாடல்

சட்டத்துறையில் 50 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சட்டத்தரணிகள் சங்கத்தால் அண்மையில் விருது வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் அந்த விருது கிடைத்தது.கொழும்பு சின்னமன் கிராண்ட் ஹோட்டலில் அந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வினை அடுத்து இசை நிகழ்ச்சியுடன் அங்கு விருந்துபசாரம் ஒன்றும் இடம்பெற்றது.

அப்போது ரணில் அவரது பழைய நண்பர்கள் எல்லோரிடமும் போய்ப் பேசினார்.அங்கு விருது பெற்றவர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்தார்.



அவ்வாறானவர்களுள் ஒருவர் சட்டத்தரணியும் பொப் பாடகருமான சொஹான் வீரசிங்க.

அவருக்கு முதலில் வாழ்த்துக் கூறிய ஜனாதிபதி தனக்காக நல்ல பாடல் ஒன்றைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார்.

கேட்டவர் ஜனாதிபதி அல்லவா.மறுப்பாரா...

விஜய குமாரதுங்கவின் படத்தில் இடம்பெற்ற ஒரு பாடலைப் பாடி ரணிலையும் ஏனையவர்களை மகிழ்வித்தார் அவர்.

**இதுவரை உங்களது கட்சி 300 கோடி ரூபாவை தேர்தலுக்காக செலவளித்துள்ளது என்று சாமர சம்பத் தஸாநாயக்க நடாளுமன்றில் கூறினார். இவ்வளவு பணம் எங்கிருந்து உங்களுக்கு?**

**நீங்கள் பொலன்னறுவை கூட்டத்துக்கு ஹம்பாந்தோட்டையில் இருந்து மக்களை அழைத்து சென்றீர்கள் என்று மைத்திரிபால கூறியுள்ளாரே?**

**ஜேவிபி தேசிய மக்கள் சக்தியாக மாறியது ஏன்? ஜேவிபி என்ற பெயரை வைத்துக்கொண்டு வெல்ல முடியாது என்பதாலா?**

**ஜேவிபி விமர்சனம் மட்டும்தான்.வேலைத்திட்டம் எதுவும் இல்லை என்று எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றனவே?**

**உங்கள் கட்சிக்கு ரணில் விக்ரமசிங்க உதவுகிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறதே?**

# உள்ளூராட்சி சபை தேர்தல் முடிந்து 4 மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல்



இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் ஜேவிபி உறுப்பினர் டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

கேள்வி: இதுவரை உங்களது கட்சி 300 கோடி ரூபாவை தேர்தலுக்காக செலவளித்துள்ளது என்று சாமர சம்பத் தஸ ாநாயக்க நடாளுமன்றில் கூறினார்.இவ்வளவு பணம் எங்கிருந்து உங்களுக்கு?

பதில் : அவர் நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் கூறியது முற்றிலும் பொய். நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி விரும்பிய பொய்களை கூறலாம்.அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. அந்த தைரியத்தில்தான் இப்படி பொய் கூறுகிறார்.

அவர் முடிந்தால் நாடாளுமன்றத்துக்கு வெளியே வந்து ஆதாரத்தோடு ஊடகத்துக்கு முன் சொல்லட்டும்.

உண்மையில் நாங்கள் அதிகம் செலவளித்திருந்தால் உரிய ஆதாரத்தைத் திரட்டி தேர்தல் முடிந்ததும் எங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யலாம். நிரூபிக்கப்பட்டால் உறுப்பினர் பதவியும் இல்லாமல் போகும்.

அதைச் செய்யலாமே.இப்படி பொய் கூறுவதை விட்டு விட்டு.

கேள்வி: நீங்கள் பொலன்னறுவை கூட்டத்துக்கு ஹம்பாந்தோட்டையில் இருந்து மக்களை அழைத்து சென்றீர்கள் என்று மைத்திரிபால கூறியுள்ளாரே?

பதில் : அவ்வளவு தூரம் மக்களை அழைத்துச் செல்வதற்கு எங்களுக்கு என்ன பைத்தியமா? இப்போது எங்களது கூட்டத்துக்கு அதிகமான மக்கள் வருகிறார்கள்.

இந்த அரசுமீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டதும் அவர்கள் எமது பக்கம் ஓடி வருகிறார்கள். அவர்கள் விரும்பி போக்குவரத்து ஏற்பாட்டைச் செய்து எங்களது கூட்டங்களுக்கு வருகிறார்கள்.

நாங்கள் வெளி ஊர்களில் இருந்து மக்களை அழைத்து வருவது உண்மை என்று அவர்கள் நிரூபிக்க ஒரேயொரு வழி இருக்கிறது.அதுதான் தேர்தலை நடத்துவது.

தேர்தலை நடத்திக் காட்டுங்கள். அப்போது உண்மை புரியும்.

கேள்வி : ஜேவிபி தேசிய மக்கள் சக்தியாக மாறியது ஏன்? ஜேவிபி என்ற பெயரை வைத்துக்கொண்டு வெல்ல முடியாது என்பதாலா?

பதில் : அப்படி இல்லை.நாம் எல்லோரையும் ஒன்றிணைந்து பரந்த கூட்டணி ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டோம்.

கூட்டணி ஒன்றை அமைக்கும்போது புதிய பெயரில் போவதுதான் நன்றாக இருக்கும்-உட்சாகமாக இருக்கும் என்று நாம் கருதினோம்.அதன் அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்தியை உருவாக்கினோம்.

கேள்வி : சீனாவின் உரக் கப்பலுடன் தொடர்புபட்ட பிரதானி உங்களது கட்சியின் வேட்பாளர் என்று சொல்லப்படுகிறதே?

பதில் : இந்த உரக் கப்பல் தொடர்பில் அதிகம் எதிர்ப்பை வெளியிட்டவன் நான்.இந்த உர மோசடியில் தொடர்புபட்டவர் சசேந்த்ர ராஜபக்ச.அது நிரூபிக்கப்பட்ட ஒன்று.

அவரது குற்றத்தை மூடுவதற்காக எங்கள்மீது பலி போடுகிறார்கள்.

கேள்வி: ஜேவிபி விமர்சனம் மட்டும்தான். வேலைத்திட்டம் எதுவும் இல்லை என்று எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றனவே?

பதில் : அவர்கள் எங்களது வேலைத்திட்டத்தைப் படித்துப் பார்க்கவில்லை.2017இல் தொழில் சங்கங்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆகியோருடன் இணைந்து இந்த நாட்டுக்குப் பொருந்தக்கூடிய கொள்கை யைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்தோம்.

அதை அடிப்படையாகக் கொண்டுதான் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நாம் எமது கொள்கையை வெளியிட்டோம்.

அதை மக்கள்மயப்படுத்தியுள்ளோம். புத்தகம் அடித்து வெளியிட்டுள்ளோம். அதில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட கல்வி, போக்குவரத்து,வர்த்தகம்,சுகாதாரம்,கலாச ாரம் உள்ளிட்ட 10 விடயங்களை தனியாக வெளியிட்டிருந்தோம்.

எமது இணையத்தளத்துக்குள் சென்றால் இப்போதும் அதைப் பார்க்க முடியும். மேடைகளிலும் இந்தக் கொள்கைபற்றிப் பேசுகிறோம்.ஊடக சந்திப்புக்களிலும் பேசுகிறோம்.

ஆனால்,பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட வேண்டுமாக இருந்தால் அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும்.இப்போதுள்ள ஊழல் அரசியலால் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது.

நாம் அதிக முக்கியத்துவம் கொடுப்பது அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத்தான்.சுருக்கமாகக் கூறினால் காயத்துக்கு மருந்து போடும் முன் காயத்தை நன்றாக சுத்தம் செய்ய வேண்டும்.

ஊழலை ஒழிக்கும்-திருடர்களை பிடிக்கும்-அவர்களுக்குத் தண்டனை வழங்கும்-திருடப்பட்ட சொத்துக்களை மீட்டெடுக்கும்-வீண் விரயத்தை இல்லாதொழிக்கும் அரசியல் கலாசாரம் இப்போது இந்த நாட்டுக்குத் தேவை.

அதில்தான் நாம் கூடுதல் கவனம் செலுத்துகிறோம்.

அதிகமாக எம்மீது குற்றம் சுமத்துபவர்கள் ஐக்கிய மக்கள் சக்திதான்.அவர்கள் அவர்களின் பொருளாதாரத் திட்டமான டிடரநிசவைெ ஐ வெளியிட்டு வைத்தபோது ஹர்ச டி சில்வா கூறினார் ஊழல் மோசடியை ஒழிக்காமல் எந்தவொரு பொருளாதாரத் திட்டத்தை வெளியிடும் வேலை இல்லை என்றார்.

அதுதான் உண்மை.

ஆனால்,ஐக்கிய மக்கள் சக்தி ஊழல்வாதிகளை கூடவே வைத்துக்கொண்டு ஊழலை ஒருபோது ஒழிக்க முடியாது.அதை எங்களால் மாத்திரமே செய்ய முடியும்.ஆட்சி கிடைத்தால் நாம் அதைச் செய்வோம்.

கேள்வி : உங்கள் கட்சிக்கு ரணில் விக்ரமசிங்க உதவுகிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறதே?

பதில் : ரணில் பொருளாதார கொள்கையை நாடாளுமன்றில் வெளியிட்டபோதும்-அதனைத் தொடர்ந்து வரவு-செலவுத் திட்டத்தை வெளியிட்டபோதும் ஐக்கிய மக்கள் சக்தி கூறியது என்ன?

எங்களது பொருளாதாரக் கொள்கைதான் ரணிலின் பொருளாதாரக் கொள்கை என்றார்கள்.

அந்த இரண்டு பொருளாதாரக் கொகைக்கும் இடையில் எந்த மாற்றமும் இல்லை.

2015இல் சஜித் வகித்த அமைச்சின் ஊடாக 2500 பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தார்.சட்டவிரோதமான முறையில் அது இடம்பெற்றது.

அவரும் அந்த அமைச்சில் ஊழல்-மோசடியில்தான் ஈடுபட்டார்.சஜித்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வேண்டியளவு இருக்கின்றன.

சஜித்தும் அவரது ஆட்களும் ரணில் செய்த மத்திய வாங்கி மோசடியை பாதுகாத்தவர்கள்.சுஜீவ சேரசிங்க,அஜித் பி பெரேரா,ஹர்ச டி சில்வா எல்லோரும் கோப் குழுவில் ரணிலைப் பாதுகாத்தார்கள்.

ஊழலை பாதுகாத்தவர்கள் இருப்பது சஜித்துடன்.சுஜீவ ரணிலைப் பாதுகாத்து புத்தகமே எழுதினார்.

2008 இல் பசில் ராஜபக்ஸ அவுஸ்திரேலியாவில் இருந்து பசு மாடுகளை இறக்கி வேலைத் திட்டம் ஒன்றைத் தொடங்கினார்.அந்த மாடுகள் இலங்கைக்கு பொருத்தமற்றவை.போதுமான அளவு பால் கறப்பதில்லை.

2015 இல் ஆட்சி மாறியதும் இதைச் சுட்டிக்காட்டிடோம்.ஆனால்,அதைக் கணக்கில் எடுக்காது அப்போது அமைச்சராக இருந்த பி.ஹறிசனும் அதே திட்டத்தை முன்னெடுத்தார்.

அந்த ஹாரிசன் இருப்பது சஜித்துடன்...

2015இல் ஊழல் புரிந்த சிலர் ரணிலுடனும் ஏனையவர்கள் சஜித்துடனும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றுதான்.

கேள்வி : உங்கள் கட்சிக்கு சர்வதேச தொடர்புகள் இல்லை என்று கூறுகிறார்களே?

பதில் : சர்வதேச தொடர்பு என்பது தனிப்பட்ட உறவு கிடையாது.இரண்டு அரசுகளுக்கு இடையிலான தொடர்பாகும்.

கேள்வி : உங்களது ஆட்சியின் எம்பிக்களின்-முன்னாள் ஜனாதிபதிகள் ஓய்வூதியம் ஒழிக்கப்படுமா?

பதில் : ஆம்..நிச்சயமாக ஒழிக்கப்படும்.

அரசியல் என்பது மக்கள் சேவை.

அதற்கு ஏன் ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.?

இப்போது எங்களது எம்பிக்களும் ஓய்வூதியம் பெறுகிறார்கள்.ஓய்வூதியத்தை இல்லாதொழிக்க இப்போது யாராவது சட்டமும் கொண்டு வந்தால் அதற்கு ஆதரவளிக்க நாம் தயார்.

இப்போது எமக்கு கிடைக்கும் ஓய்வூதிய கொடுப்பனவை மக்கள் சேவைக்குப் பயன்படுத்தி வருகிறோம்.

கேள்வி : உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நீங்கள் வெற்றிபெற்றால் தனி அரசை உங்களால் அமைக்க முடியுமா?

பதில் : நாம் மக்களிடம் கேட்பது எம்மை தனி அரசாக நியமிக்குமாறுதான்.சலுகைகள் கொடுத்து-லஞ்சம் கொடுத்து ஆட்களை எம்முடன் சேர்த்து ஆட்சி அமைப்பதற்கு நாம் தயாரில்லை.

எங்களுக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காவிட்டால் ஊழல் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பார்கள்.இதனால் நாம் தனி அரசை மக்களிடம் கேட்கிறோம்.நாட்டை செய்து காட்டுகிறோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்றால் அது முடிந்து 4 மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டி வரும்.

**நாம் மக்களிடம் கேட்பது எம்மை தனி அரசாக நியமிக்குமாறுதான். சலுகைகள் கொடுத்து-லஞ்சம் கொடுத்து ஆட்களை சேர்த்து ஆட்சி அமைப்பதற்கு நாம் தயாரில்லை. எங்களுக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காவிட்டால் ஊழல் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பார்கள். இதனால் நாம் தனி அரசை மக்களிடம் கேட்கிறோம்.**



# Dettol இன் கருத்தரங்கு

Dettol, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முறையான சுகாதார நடைமுறைகள் மற்றும் சரியான ஊட்டச்சத்து குறித்து கருத்தரங்குகளை சமீபத்தில் நடத்தியது.

முதலாவது கருத்தரங்கு 2023 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி அங்குனுகொலபலஸ்ஸ ஆமுடீ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தின் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றதுடன், 500க்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட ஹம்பாந்தோட்டை மாவட்ட மருத்துவ சுகாதார அலுவலகத்தைச் சேர்ந்த வைத்தியர்கள், குடும்ப தாதிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரால் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிறந்த சுகாதாரம், போஷாக்கு மற்றும் பராமரிப்பு குறித்து அறிவுறுத்தப்பட்டது.

மேலும், நிகழ்ச்சியானது தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் உளவியல் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான அமர்வுகளை நடத்தியது.அதைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சி மற்றும் தாய்மார்களுக்கு இசை எவ்வாறு சிறந்த சூழலை உருவாக்குகிறது என்பதற்கான வழிகாட்டுதல்களையும் வழங்கியது.




# Dialog வழங்கும் 'METASTAGE'

Dialog நிறுவனம் ஒடு Axiataவுடன் இணைந்து 'குரவரசநளநசளநந' இல் நாட்டின் முதல் அநவயளநசளந பொழுதுபோக்கு அனுபவமான 'METASTAGE' ஐ தொகுத்து வழங்கியது. இதில் இலங்கையின் புகழ்பெற்ற கலைஞர்களான பாத்தியா மற்றும் சந்துஷ், உமாரியா மற்றும் இந்தோனேஷியாவின் Vicky Shu ஆகியோரின் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இலங்கை மற்றும் இந்தோனேசியா முழுவதும் உள்ள பார்வையாளர்களுக்கு வழங்கப்படும் இந்த பிரத்தியேக டிக்கெட் நுழைவு நிகழ்வானது futureverse. dialog.lk இணையத்தளத்திற்குச் சென்று நேரடி நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பை வழங்கியது.

Metaverse என்பது ஒரு புதிய மற்றும் உற்சாகமான பொழுதுபோக்கு வழியை வழங்கும் ஒரு மெய்நிகர் உலகமாகும். மற்றும் டயலொக்கின் Futureverse இயங்குதளமானது, பயனர்கள் தங்கள் சொந்த கதாபாத்திரங்களை உருவாக்கவும், எல்லையற்ற மெய்நிகர் சூழலில் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும் வழிவகுக்கின்றது.

இலங்கையின் இத்தகைய முதலாவது பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்குவதன் மூலம், இலங்கை டிஜிட்டல் பொழுதுபோக்கு வெளியில் டயலொக் முன்னணியில் உள்ளதுடன் மக்கள் பொழுதுபோக்கை அனுபவிப்பதற்கான புதிய மற்றும் புதுமையான பாதைகளை காணவும் வழி வகுக்கின்றது.




# SLT-MOBITEL மகளிர் தினக் கொண்டாட்டம்



SLT-MOBITEL, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, மஹாரகம அபேக்ஷா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் பெண்களுக்கு, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை கையளிக்கும் நிகழ்வை அண்மையில் முன்னெடுத்திருந்தது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா ரெலிகொம் குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ மற்றும் குழும பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத தஹநாயக்க அடங்கலாக, உயர் முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர் குழுவினரும் கலந்து கொண்டனர்.

இந்நாட்டின் சுகாதார மற்றும் சமூக நலன் கருதி SLT-MOBITEL முன்னெடுக்கும் "சம்பந்தியாவே சத்காரய" எனும் சமூக நலன்புரிச் செயற்திட்டத்தின் கீழ் இந்த நன்கொடை வழங்கியிருந்ததுடன், SLT-MOBITEL இன் சூழல், சமூக மற்றும் நிர்வாக (Environmental Social Governance - ESG) கொள்கைகளினூடாக சமூகத்தாருக்கு வெவ்வேறு நிலைகளில் ஆதரவளிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

சுகாதார துறைக்கான தனது அர்ப்பணிப்பை மேலும் முன்னெடுக்கும் வகையில் SLT-MOBITEL இனால் கடந்த ஆண்டில் 'Eco Channelling Delivery' எனும் நாமத்தில் புதிய சேவையும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. சூழலுக்கு நட்பான வகையில் வாடிக்கையாளர்களின் வசிப்பிடங்களுக்கு மருந்துப் பொருட்களை கொண்டு சென்று ஒப்படைப்பது இந்தத் திட்டத்தின் பிரதான நோக்காக அமைந்திருந்தது. அதுபோன்று, இந்த Eco Channeling சேவைகள், SLT-MOBITEL இனால் இலங்கை முழுவதிலும், தனது தீர்வுகள் மற்றும் சேவைகளை மேலும் விரிவாக்கம் செய்யும் நோக்கில் அறிமுகம் செய்திருந்த mAgent சேவையினூடாக வலுவூட்டப்படுகின்றது.

# பிரத்தியேக காந்தா ரண் கினும் சேமிப்பு கணக்கு



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இலங்கை வங்கியின் தலைவர் பரானால்ட் சி. பெதரரா, பொது முகாமையாளர் ரசல் பொன்சேகா மற்றும் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் வங்கியின் தலைமை அலுவலக வளாகத்தில் "காந்தா ரண் கினும் சேமிப்பு சான்றிதழ் " இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் வங்கியின் வாடிக்கையாளர்கள் ஆறு பேருக்கு புதிய கணக்கின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ரூ.25,000, ரூ.50,000, ரூ.100,000, ரூ.250,000, ரூ.500,000 என்ற பெறுமதிகளில் வழங்கப்பட்டதோடு அவற்றுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதமும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான நான்கு அளவுகளில் உணவு கொள்கலன்களைக்கொண்ட பரிசு ஒன்றும் வழங்கப்பட்டது.

# Business World International விருது விழா



ஐக்கிய அமெரிக்காவின் Business World International Organization அமைப்பு ஏற்பாடு செய்த Business World International விருது வழங்கும் விழா கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

மேற்படி விருது விழாவின் இம் முறை தொனிப்பொருள் 2030 ஆம் ஆண்டுக்கு ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான அர்ப்பணிப்பு என்பதாகும். Business World International Organization (BWIO) எனப்படுவது உலக தொழில்முயற்சி துறையில் வெற்றிகள் மற்றும் ஆற்றல்களை இனங்காணும் நோக்கத்துடன் ஐக்கிய அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்டதொரு அமைப்பாகும்.

மேற்படி விருதுகள் மூலம் தொழில்முயற்சி நிறுவனங்களின் தனித்துவ திறன்களை அடையாளம் கண்டு அவை ஊக்குவிக்கப்படுவதோடு துறை சார்ந்த சவால்களை வெற்றி கொள்வதற்கும் அவர்களின் திறன்களை உலகிற்கு காண்பிப்பதற்குமாக தொழில் முயற்சியாளர்களும் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

30 பிரிவுகளின் கீழ் நடைபெற்ற மேற்படி விருது விழாவில் புதிய தொழில் முயற்சிகள், வர்த்தக உலகின் ஜாம்பவான்கள், சமூகத்தை மாற்றுவதற்கு பங்களித்தோர், நிலைதகு பேண் ஆலோசகர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்துகின்ற தொழில் வல்லுனர்கள் என பல்வேறு குழுக்களுக்குரிய ஆட்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றன.

# யாழ்ப்பாணத்தில் பிளாஸ்ரிக் கழிவுகளைக் கட்டுபடுத்தும் ஹேமாஸ்



இலங்கையின் வட பிராந்தியத்தில் காணப்படும் மிகவும் மோசமாக பிளாஸ்ரிக் கழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள இரு மீன்பிடி கரையோரப் பகுதிகளான குருநகர் மற்றும் பருத்தித்துறை ஆகிய பகுதிகளை தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, Clean Ocean Force உடன் கைகோர்த்துள்ளது.

இது இரு கட்டங்களில் இடம்பெறும். மிதக்கும் பிளாஸ்ரிக், PET மற்றும் இதர கழிவுகளை அகற்றுவது மற்றும் இயந்திரங்கள் மற்றும் மனித ஊழியர்களை பங்கேற்கச் செய்து, கீழ்ப் பகுதியில் காணப்படும் பிளாஸ்ரிக்களை அகற்றுவது

இந்தத் திட்டத்தினூடாக யாழ்ப்பாண பிராந்தியத்தை பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து விடுபடச் செய்து, வதிவோரின் ஈடுபாட்டுடன் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் பெருமளவான அபிவிருத்திச் செயற்பாடுகள் காரணமாக, குருநகர், பாசையூர் மற்றும் கச்சாய் போன்ற பகுதிகள் PET மற்றும் ஒற்றைப் பாவனை பிளாஸ்ரிக்கள் மற்றும் பொலிதீன் போன்றவற்றால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

கரையோரப் பகுதிகளில் இவை அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் மக்களினதும் கடல்வாழ் உயிரினங்களினதும் வாழ்வாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# பெண்களின் தொழில்களை ஊக்குவிக்கும் Excel World மற்றும் Island Market







உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டும் நோக்குடன், எக்செல் வேர்ல்ட் மார்ச் 25 அன்று முதன்முதல் குறுகியகாலச் சந்தையை நடத்துவதற்கு தி ஐலண்ட் மாரக்கெட் நிறுவனத்துடன் கைகோர்த்தது.

சிறந்ததை செய்வதற்கான ஒரு வணிகத்தின் சக்தி என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் இது இடம்பெற்றது.

இம்முன்முயற்சிக்கான இடவசதிகள் இலவசமாக வழங்கப்பட்டது.உள்நாட்டில் உருவான சிறியளவிலான வணிகங்கள், படைப்பாளிகள் மற்றும் கைவினைஞர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட, தி ஐலண்ட் மார்க்கெட்டின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று பெண்களால் நடத்தப்படும் நிறுவனங்களில் மேலதிகமாக முதலீடு செய்வதும் வசதியளிப்பதுமாகும்.

உணவு, மனைப்பொருட்கள், ஆடைகள், ஆபரணங்கள், ஓவியங்கள், ஒளியூட்டும் பொருட்கள், சேகரிப்புகள், தொண்டுச் சேவை தொடர்பான பொருட்கள் மற்றும் மேலும் பலவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஐலண்ட் மார்க்கெட், 50 இற்கும் மேற்பட்ட உள்ளூர் கைவினைஞர்களுடனும் படைப்பாளிளுடனும் நெருக்கமாகப் பணியாற்றிவருகின்றது.

# சிவனொளிபாதமலை யாத்திரிகர்கது நிவாரணியாக IODEX...




வலி நீக்கும் நிவாரணியான ஐழுனுநுஓ, மார்ச் 3 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையான 17 நாட்களுக்கு, சிவனொளிபாத ஆலய வளாகத்தில் “ஐழுனுநுஓ சுவசஹன” எனும் சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

இதன் போது, சிவனொளிபாத மலைக்கு விஜயம் செய்திருந்த ஆயிரக் கணக்கான யாத்திரிகர்களின் வலிகளுக்கு நிவாரணத்தை வழங்கியிருந்தது.

”வலி உங்களுக்கு தடையாக அமைந்திட இடமளிக்காதீர்கள்” எனும் தொனிப்பொருளின் கீழ், ஆறு வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பமாகிய இந்த ”IODEX சுவசஹன“ எனும் சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம், அக்காலப்பகுதியினுள் நாட்டின் பல்வேறு சமய, கலாசார நிகழ்வுகளின் போது யாத்திரிகர்களுக்கு நிவாரணத்தை வழங்கும் வகையில் செயலாற்றியிருந்தது.

இம்முறை சிவனொளிபாத யாத்திரைக்கு வருகை தந்திருந்த யாத்திரிகர்களின் தலைவலி, கழுத்து வலி, மூட்டு வலி மற்றும் இடுப்பு வலி போன்ற உடல்சார் வலிகளால், யாத்திரையை மேற்கொள்வதில் எழக்கூடிய இடையூறுகளை குறைத்துள்ளது.

வர்த்தக சுடர்

# சர்வதேச மகளிர் தினத்தின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுவோம்

பெண்களுக்கான இலங்கையின் மிகச்சிறந்த பணியிடங்களில் ஒன்றாகத் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களாக (2018-2022) கௌரவிக்கப்பட்டுள்ள AIA இன்சூரன்ஸ் தனது நிறுவனத்தினுள் மட்டுமின்றி நாடு முழுவதுமுள்ள அனைத்துத் தரப்புப் பெண்களின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுதல், இதில் நிறுவனம் ஒழுங்கு செய்யப்பட்ட குதூகலமான, மற்றும் ஊக்குவிக்கும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளின் தொடர்களுடன் பெண்களின் பங்கைக் கௌரவித்தல், கண்ணியப்படுத்தல் மற்றும் பாராட்டுதல் ஆகியவற்றுக்காக மார்ச் மாதத்தினை முழுவதுமாகவே அர்ப்பணித்திருந்தது.

நாடு முழுவதுமுள்ள அதேசமயம் பெண்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அவர்களுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்குவதற்கும் நிறுவனம் தனது முயற்சியினைத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

பொதுவாக அனைத்து இடங்களிலுமுள்ள பெண்கள் சம உரிமையுடைய மற்றும் சமமான வாய்ப்புக்களைக்



அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலித்தல், அதிக பாலினச் சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை வலியுறுத்தல் ஆகியவற்றில் மார்ச் மாதத்தினை முற்றிலுமாக அர்ப்பணித்துள்ளது.

AIA சர்வதேச மகளிர் தினத்தை வழமை போன்று மார்ச் 08 ஆம் திகதியன்று மாத்திரம் கொண்டாடாமல் மிகவும் கவனமாக பெண்களுக்கு அதிகாரமளிக்கும் பெண்களுக்கான ஐகுஊ-னுகுயுவு இன் பணியில் பெண்கள் திட்டமான “அய சுரக்கின யுஐயு“ திட்டத்தினைக் கடந்த வருடம் AIA IFC உடன் ஒன்றினைந்து ஆரம்பித்திருந்தது. பெண்கள் தைரியமாகவும், நம்பிக்கையுடனும், மதிப்புமிக்கவர்களாகவும் மற்றும் பாராட்டப்படுவதை உணரவும் கொண்ட எவ்விதமான பாகுபாடுமற்ற தங்களை ஒரே மாதிரியாக நடத்தக்கூடிய எதிர்காலமொன்றையே வேண்டுவதோடு, அதற்கு மிகவும் தகுதியானவர்களாகவும் இருக்கின்றனர். இது AIA இன்ஷூரன்ஸில் மிகவும் கவனமான மற்றும் முக்கியமான திட்டமாகவே அமைந்திருக்கின்றது.




# SLIM-KANTAR மக்கள் விருதுகள் -2023

SLIM-KANTAR மக்கள் விருதுகளின் 2023 பதிப்பை பற்றிய அறிமுகத்தினை SLIM சமீபத்தில் அறிவித்தது, தற்போது இலங்கையில் இயங்கும் உலகின் முன்னணி சந்தைப்படுத்தல் தரவு மற்றும் பகுப்பாய்வு நிறுவனமான முயவெயச, 2022 ஆம் ஆண்டு முதல் ளுடுஐஆ-முயுவேயுசு மக்கள் விருதுகளுக்காக SLIM உடன் தனது ஆராய்ச்சி பங்காளியாக கைகோர்த்துள்ளது.

மக்கள் ஆணையின்படி “தெரிவுகள் நம்மை வரையறுக்கின்றன” என்ற தொனிப்பொருளின் கீழ் SLIM-KANTAR மக்கள் விருதுகள் 2023 நடைபெறவுள்ளது.

SLIM-KANTAR மக்கள் விருதுகள், இலங்கை மக்களின் இதயங்களுக்கு நெருக்கமாக இருக்கும் மிகவும் பிரபலமான வர்த்தக நாமங்கள், ஆளுமைகள், நிறுவனங்கள், விளம்பரங்கள், பாடல்கள் மற்றும் கலைஞர்களை அடையாளம் காண ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி செயல்முறையைப் பயன்படுத்துகின்றன.

அதன் தனித்துவம் அதன் மக்கள் தலைமையிலான நடுவர் அமைப்பில் உள்ளது, இது பொதுமக்களின் இதயங்களைக் கவர்ந்தவர்களை உண்மையிலேயே அங்கீகரிக்கும் ஒரு நிகழ்வாக இது ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் சந்தைப்படுத்துதலுக்கான உச்ச அமைப்பான ளுடுஐஆ ஆல் 2006 இல் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் விருதுகள் என்பது நாட்டு மக்கள் நடுவர்களாகச் செயல்படும் விருது வழங்கும் நிகழ்ச்சியாகும். இந்த முன்னோடி நிகழ்வு பல ஆண்டுகளாக உத்வேகத்தைப் பெற்றுள்ளது, இது சந்தைப்படுத்தல் துறையில் ஒரு உந்து சக்தியாகவும், பொதுமக்கள் மத்தியில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வாகவும் உள்ளது.